சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

ஓ.எஸ்..24/2019

2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 04 ம் நாள் வா.சா.1 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.சபரீசன், பென்ச் கிளார்க், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | உமாமகேஷ்வரி | வயது | 40 |
| க/பெ | சண்முகம் | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | காரேகவுண்டன்புதூர், | மாவட்டம் | கோயமுத்தூர் |
| | | தொழில் | இல்லத்தரசி |

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 3 மற்றும் 6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை -

பிராதில் இரண்டு அயிட்ட சொத்துக்களை காட்டி உள்ளேன் என்றால் சரி தான். முதலாவதாக குமார கவுண்டர் மூலமாக பாத்தியப்பட்ட சொத்துக்களையும் இரண்டாவதாக பழனிக்கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களையும் காட்டி உள்ளேன் என்றால் சரி தான். குமார கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் சுப்பையன் மற்றும் எனது மாமனார் பொன்மலைசாமி கவுண்டருக்கு வந்தன என்றால் சரி தான். இந்த சொத்துக்கள் புல எண்கள்.1291, 294,295 மற்றும் 307 ஆகிய புல எண்களில் இருந்தன என்றால் சரி தான். பழனிக் கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்துகளான புல எண்.301/4 மற்றும் 305/3 ஆகியவற்றை பழனிக்கவுண்டர் சுயமாக சம்பாதித்தார் என்றால் சரி தான். அவ்வாறு பழனிக்கவுண்டர் வாங்கிய சொத்துக்களைஅவரது மகன்களான சுப்பையன் மற்றும் எனது மாமனார் பொன்மலைச்சாமி கவுண்டருக்கு உயில் எழுதி வைத்தார் என்றால் சரி தான். அவ்வாறு உயில் எழுதி வைக்கப்பட்ட சொத்துக்களை சுப்பையனும் எனது மாமனார் பொன்மலைச்சாமி கவுண்டரும் கூட்டாக தான் அனுபவித்து வந்தார்கள் என்றால் நான் திருமணம் செய்து வந்த போது அவர்கள் இருவரும்

தனித்தனியாக தான் அனுபவித்து வந்தார்கள். உயில் சாசனத்தில் புல எண்.301/4 மற்றும் 305/3 ஆகிய சொத்துக்கள் எனது மாமனார் பொன் மலைச்சாமிக்கு ஒதுக்கப்பட்டு இருந்தது என்றால் சரி தான். உயில் ஆவணத்தில் மற்ற சொத்துக்கள் எனது மாமனாரின் சகோதரர் ஆன சுப்பையனுக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரி தான். எனது மாமனாரின் அப்பாவான பழனிக்கவுண்டர் அவர் சுயமாக சம்பாதித்த சொத்துக்களை பொறுத்து அவரது மக்களான சுப்பையன் மற்றும் எனது மாமனார் பொன் மலைச்சாமி கவுண்டருக்கு தனித் தனியாக உயில் ஆவணம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரி தான். பழனிக்கவுண்டர் இறக்கும் வரை அந்த உயிலை ரத்து செய்யாமல் அவர் இறந்த பின்னர் சுப்பையன் மற்றும் பொன்மலைச்சாமி கவுண்டர் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை அனுபவித்து வந்தார்கள் என்றால் சரி தான். குமார சாமிக் கவுண்டர் மூலமாக வந்த புல எண்கள்.291, 294, 295 மற்றும் 307 ஆகிய சொத்துக்களை சுப்பையன் மற்றும் எனது மாமனார் பொன் மலைச்சாமி வாய்மொழியாக பாகம் பிரித்து கொண்டார்கள் என்றால் எனது திருமணத்திற்கு பின்னர் நடந்த விவரங்கள் மட்டும் எனக்கு தெரியும். எனக்கு திருமணம் ஆன போது எனது மாமனார் அவரது சொத்துக்களை தனியாக அனுபவித்துக் கொண்டு இருந்தார். குமார சாமிக்கவுண்டர் மூலம் பாத்திய ப்பட்ட சொத்துக்களில் எனது மாமனார் எந்த எந்த சொத்துக்களை அனுபவித்து வந்தார் என்றால் புல எண்கள் நிறைய உள்ளதால் எனக்கு சரியாக தெரியவில்லை. புல எண்.295/5, 307/2 சி, 291/5, 294/4, 294/6, 294/9, 294/10, 295/11 ஆகிய சொத்துக்கள் எனது திருமணத்திற்கு முன்னரே எனது மாமனாருக்கு அவரது தாத்தா குமாரசாமிக் கவுண்டர் மூலமாக வந்த சொத்துக்கள் என்றால் சரி தான். இந்த சொத்துக்கள் தான் குமாரசாமிக் கவுண்டர், பழனிக்கவுண்டர் இறந்த பின்னர் எனது மாமனார், எனது கணவர், மற்றும் கொழுந்தன் கணேஷ்குமார் ஆகியோருக்கு பாத்தியப்பட்டது என்றால் பழனிக் கவுண்டர் மூலமாக வந்த சொத்துக்களில் மேற் சொன்னவர்களுக்கு பாத்தியம் உள்ளது . பழனிக் கவுண்டர் சுயமாக சம்பாதித்து உயில் எழுதி வைத்த சொத்துக்களில் எனது கணவருக்கோ 3ம் பிரதிவாதிக்கோ எந்த பாத்தியமும் இல்லை என்றால் சரி யல்ல. உயில் மூலமாக எழுதி வைத்த சொத்துக்களில் எனது மாமனார் பொன்மலைச்சாமிக்கு மட்டும்

பாத்தியம் உள்ளது என்றால் சரி யல்ல. புல எண்கள்.295/5, 307/2 சி, 291/5, 294/4, 294/6, 294/9, 294/10, 295/11 ஆகிய குமாரசாமி கவுண்டர் மூலம் பழனிக் கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து எனது கணவரான 2-ம் பிரதிவாதி, இந்த வழக்கில் 1 மற்றும் 3-ம் பிரதிவாதிகள் மீது மேட்டுப்பாளையம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வஎண்307/2006 என்ற வழக்கினை தாக்கல் செய்துஇருந்தார் என்றால் சரி தான். அந்த வழக்கில் எனது கணவர் மற்றும் அந்த வழக்கின் பிரதிவாதிகள் சமாதான மனு தாக்கல் செய்து அதன் அடிப்படையில் தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் சரி தான். அந்த தீர்ப்பின் படி புல எண்கள்.295/5. 307/2 சி ஆகிய சொத்துக்கள் எனது கணவரின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரி தான். ஆனால் தற்போது அந்த நிலத்திற்குள் போனால் எனது கணவரின் தம்பியான 3-ம் பிரதிவாதி எங்களை உள்ளே நுழைய விடாமல் தடுத்து அடிக்கிறார். புல எண்.307/2 சி யில் எனது கணவர் பாகப் பிரிவினைக்கு பின்னிட்டு பி. ஆர் எஸ் ஜி. டெக்ஸ்டைல்ஸ் என்ற பெயரில் ஒரு நிறுவனத்தை ஆரம்பித்தார் என்றால் எனது கணவரும் எனது மாமனாரும் பங்குதாரர்களாக சேர்ந்து ஆரம்பித்தார்கள். அவ்வாறு ஆரம்பித்த பின்னர் ஆந்திரா வங்கியில் இருந்து எனது கணவரும் எனது மாமனாரும் கடன் வாங்கினார்கள் என்றால் சரி தான். அவ்வாறு நிறுவனத்தை ஆரம்பித்த பின்னர் எனது கணவர் அந்த நிறுவனத்தை முறையாக நடத்தாமல் ஊதாரித்தனமாக செலவு செய்து பொறுப்பில்லாமல் இருந்தார் என்றால் சரி யல்ல. என்னுடைய நிரூபண வாக்கு மூலத்திலேயே எனது கணவர் பணத்தை ஊதாரித்தனமாக அவருடைய தனிப்பட்ட சந்தோசத்திற்காக செலவுசெய்து வந்தார் என்றும் சொத்துக்களை காட்டி மிகுந்த தொகை கடன் பெற்று வந்தார் என்றும்அவரை மாற்ற நான் எடுத்த எந்த முயற்சியும் பலன் அளிக்கவில்லை என்றும் குடும்பத்தையும் ஒழுங்காக கவனிக்க வில்லை என்றும் எனது அறிவுரையையும் கேட்கவில்லை என்றும் குறிப்பிட்டு உள்ளேன் என்றால் சரி தான். புல எண்.307/2 சி -ல் உள்ள மில் மற்றும் உள்ள இடங்கள் தற்போது கடன் கொடுத்த ஆந்திரா வங்கி கையகப்படுத்தி தற்போது அதன் கட்டுப்பாட்டில் உள்ளது என்றால் சரி தான். 5-ம் பிரதிவாதிக்கு கட்ட வேண்டிய கடன் தற்போதும் நிலுவையில் உள்ளது என்றால் சரி தான். 5-ம் பிரதிவாதியின் கட்டுப்பாட்டில் உள்ள

புல எண்.307/2 சி நிலத்திற்குள் 3-ம் பிரதிவாதி உள்ளே விட மறுப்பதாக பொய்யாக கூறுகிறேன்என்றும் அதற்கும் 3-ம் பிரதிவாதிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரி யல்ல. மில் போக மீதமுள்ள சொத்தில் தான் 3-ம் பிரதிவாதி விட மறுக்கிறார். மீதமுள்ள சொத்து என்பது புல எண். 295/5 ல் உள்ளது என்றால் சரி தான்.

( வழக்கறிஞர் வேண்டுகோள் படி குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

Sd/-G.Gengaraj
சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.